# கல்லீரலை தாக்கும் வைரஸ்கள்



**டாக்டர்.ஆர்.கண்ணன்**
இரைப்பை, குடல், கல்லீரல் மற்றும் உடல்பருமன் அறுவை சிகிச்சை நிபுணர்

மஞ்சள்காமாலை நோய் வர பல காரணங்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை வைரஸ்கள், பாக்டீரியா, பாதுகாப்பற்ற உணவு மற்றும் குடிநீர். இரத்த சிவப்பணுக்களின் சிதைவு (Haemolytic Jaundice), பித்தநீர் செல்லும் பாதையில் அடைப்பு (Obstruction), மதுப்பழக்கம், கல்லீரல் புற்றுநோய் போன்றவைகளாகும்.

இவற்றில் முக்கியமானவைகளான வைரஸ்களைப் பற்றிக் காண்போம். A,B,C,D,E, என ஐந்து வகைப்படும். B,C,D வைரஸ்கள் முக்கியமாக இரத்தத்தின் மூலமாகவும் A மற்றும் E வைரஸ்கள் சுகாதாரமற்ற குடிநீர் மற்றும் உணவு வழியாகவும் பரவும்.

## ஹெபடைட்டிஸ் 'A'

இது நாம் சாதாரணமாக காண்கின்ற மஞ்சள் காமாலை. பச்சிளம் குழந்தை முதல் பெரியவர்கள் வரை யாருக்கு வேண்டுமானாலும் இந்நோய் வரலாம். இது குழந்தைகளை எளிதில் தாக்கக்கூடியது.

## நோய் வரும் வழி

பாதுகாப்பற்ற குடிநீர் மற்றும் உணவு மூலம் இந்த வைரஸ் பரவுகின்றது.

அடைவுகாலம் (Incubation period) - 4-6 வாரங்கள்.

அறிகுறிகள்

சோர்வு, பசியின்மை

மேல் வயிற்றில் வலி

காய்ச்சல்

வாந்தி, அரிப்பு போன்றவை தோன்றும்

## நோய் நிர்ணயம்

HAV IgM எனப்படும் இரத்தப் பரிசோதனை கொண்டு இந்த வைரஸை கண்டறியலாம்.

## தடுப்பு முறைகள்

சுகாதாரமான குடிநீர் மற்றும் உணவு தயாரிப்பு கையாள்வதன் மூலம் இதனை தடுக்கலாம்.

## தடுப்பூசி

HAV VACCINE எனப்படும் தடுப்பூசி மூலம் இதனை வராமல் தடுக்கலாம்.

## சிகிச்சை முறை

தக்க மருந்துகள் எடுத்துக்கொண்டால் 4 முதல்6 வாரங்களில் தானாகவே சரியாகும்.

## ஹெபடைட்டிஸ் 'B'

உலகளவில் 35 கோடி நோயாளிகள் ஹெபடைடிஸ் B வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஹெபடைட்டிஸ் B வைரஸினால் உண்டாகும் பக்கவிளைவுகள் அதிகம் என்பதனால் இதனை மிகவும் ஆபத்தான வைரஸாக கருதப்படுகின்றது.

## வைரஸ் பரவும் முறை

1.இரத்தத்தின் மூலமாக பரவும்

a.இரத்ததானம் செய்யும் போது

b.B-வைரஸ் உள்ளவர்களுக்கு போட்ட ஊசியை மற்றவர்களுக்கு போடும் போது

c.போதை மருந்து ஊசி போட்டுக் கொள்கிறவர்கள்

d.பச்சை குத்துதல்

e.அக்குபஞ்சர் ஊசிகள் மூலம்


f.கர்ப்பமாய் இருக்கும் தாயிலிருந்து கருவிலிருக்கும் குழந்தைக்கு

g.உடலுறவின் போது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு


h.எச்சில், சிறுநீர் மூலமாகவும் இந்த வைரஸ் பரவும்.

## நோயின் அறிகுறிகள்


ஆரம்பத்தில் எந்த அறிகுறியும் தெரியாது. பிறகு




கல்லீரல் அழற்சி புற்றுநோயாக மாறும் விதம்




கல்லீரல் வைரஸ்கள் A,B,C




ஹெபடடைட்டிஸ் 'B' வைரஸ்

ஒரு சிலருக்கு காய்ச்சல், குமட்டல், வாந்தி, பசியின்மை, வயிற்றுவலி, எலும்பு மூட்டுகளில் வலி, உடம்பு வலி, சோர்வு போன்றவை ஏற்படும். கண்கள் மஞ்சள் நிறத்தில் தோன்றும். சிறுநீர் மஞ்சள் நிறத்தில் போகும்.

## மஞ்சள் காமாலை முற்றிய நிலையில்:

கல்லீரல் அழற்சி அதிகமாகி நாளடைவில் cirrhosis என்னும் நிலையை அடையும் இதனால்

1.வாந்தியில் இரத்தம் வரும்.

2.மலத்தில் இரத்தப்போக்கு இருக்கும்.

3.கல்லீரல் செயலிழந்து உயிருக்கு ஆபத்து ஏற்படலாம்.

4.கல்லீரலில் புற்றுநோய் ஏற்படலாம்.

## எவ்வாறு கண்டுப்பிடிப்பது?

மிக எளிதாக இரத்தத்தில் Hepatitis B வைரஸின் surface antigen (HBSAG) உள்ளதா என்பதைக் கண்டறிந்து கண்டுப்பிடிக்கலாம்.

## நோய் வராமல் தடுக்க

நோய் வராமல் தடுக்க Hepatitis B தடுப்பூசி (ENGERIX B) போடப்பட வேண்டும்.

1.குழந்தை பிறந்த உடன் முதல் ஊசியும், 1 1/2, 2 1/2, 3 1/2 ம் மாதத்தில் மூன்று ஊசிகளும் 5ம் ஊசி 5ஆம் வருடம் போடப்படவேண்டும்.

2.பெரியவர்களுக்கும் 0,1,2 அல்லது 6 மாதத்தில் மூன்று ஊசிகள் போடப்படவேண்டும். மேலும், 10 ஆண்டிற்குப் பிறகு Booster dose போடப்பட வேண்டும். அப்பொழுதுதான் B-வைரஸ் வராமல் தடுக்க முடியும்.

## மற்ற தடுப்பு வழிகள்

1.இரத்த தானம் செய்யும் போது இரத்தத்தில் ஹெபடைடிஸ் B-வைரஸ் உள்ளதா என பரிசோதிக்கவேண்டும்.

2.ஒருவருக்கு போட்ட ஊசிகளை மற்றவர்க்கு உபயோகிக்கக் கூடாது.

3.Disposable Syringes உபயோகித்தல் நல்லது.

4.நோய் உள்ளவர்களுக்கு முத்தம் கொடுப்பதோ, அவர்களுடன் உடலுறவு கொள்வதோ கூடாது.

5.அறுவைச் சிகிச்சை, பிரசவம் மற்றும் கருக்கலைப்பின் போது மருத்துவ கருவிகள் தொற்றுநீக்கம் (Sterilization) செய்ய வேண்டும்.

6.ஹெபடைடிஸ் B பாதித்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் உதவியாளர்களும் தகுந்த தடுப்பு முறைகளை பின்பற்றவேண்டும். மேலும், தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளவேண்டும்.


## Hepatitis 'B' சிகிச்சை முறை

1.Lamivudine, Adefovir, Entacavir, Telbivudine போன்ற Anti Viral மருந்துகளும் பயன்படுத்தப்படுகிறது.

2.Peginterferon alfa 2b எனப்படும் ஊசி 48 வாரங்கள் ஊசியாகப் போடப்படுகிறது.

## ஹெபடைட்டிஸ் 'C' வைரஸ்

இது அரிதாக காணப்படும் வைரஸ் வகையாகும். இந்த வைரஸ் நாட்பட்டு உடலில் தங்கி நோயாளிக்கு பல ஆபத்தான விளைவுகளை




'சி' வைரஸினால் கல்லீரல் புற்றுநோய் மாறும் விதம்

உண்டாக்கும். இந்தியர்களை காட்டிலும் வெளிநாடுகளில் இவ்வைரஸ் தொற்று அதிகமாக காணப்படுகின்றது.

## நோய் வரும் வழி

1.ஹெபடைட்டிஸ் சி வைரஸானது நோயுற்றவரின் இரத்தம் மற்றும் உடல் திரவங்களினால் பரவுகின்றது. மேலும் கருவுற்ற தாயின் மூலம் குழந்தைக்கு பரவும்.

2.அலுவலகங்கள் (பொதுவாக மருத்துவம் சார்ந்த துறைகளில் நோயாளியின் இரத்தம் மற்றும் அவர்களுக்கு உபயோகித்த ஊசிகளின் மூலம் பரவும்.

3.’C’ வைரஸ் தொற்றுள்ளவருடன் உடலுறவு கொள்ளுவதாலும் பரவும்.

4.போதை ஊசி போட்டு கொள்கின்றவர்கள் ஒரே ஊசியை பலரும் பகிர்ந்து கொள்ளும்போதும்.

5.பச்சை குத்துதல் மூலமும் பரவும்.

6.எச்சில், மலம், சிறுநீர் இவற்றின் மூலமும் இக்கிருமி பரவும்.

7.இரத்தம் ஏற்றிக் கொள்வதன் மூலமாகவும் பரவும்.

## அறிகுறிகள்

1.ஆரம்பத்தில் எந்த அறிகுறியும் தெரிவதில்லை. இது கல்லீரலை தாக்கியப் பின்னரே இதன் அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்கும்.

சோர்வு, காய்ச்சல், வயிற்றுவலி, பசியின்மை, பேதி, கண் மற்றும் சிறுநீர் மஞ்சளித்தல் போன்ற அறிகுணங்கள் தோன்றும்.

## நோயினால் உண்டாகும் சிக்கல்கள்

ஹெபடைடிஸ் சி வைரஸானது நாட்ப்பட்டு காணப்படும் போது மெதுவாக கல்லீரலில் அழற்சியை உண்டாக்கி கல்லீரல் முழுவதுமாக செயல் இழத்தல் கல்லீரல் புற்றுநோய் போன்றவற்றை உண்டாக்கும்.

## நோய் நிர்ணயம்

HCV antigen எனப்படும் இரத்தப் பரிசோதனை கொண்டு இவ்வைரஸ் தொற்று உள்ளது என்று கண்டு அறியலாம்.

## தடுப்பு முறைகள்

ஹெபடைட்டிஸ் B மற்றும் C கிருமிகளை ஒருவருக்கு பரவுவதை தடுக்க பின்வரும் தவிர்ப்பு முறைகள் பலன் தரும்.

இரத்தம் பெறும் பொழுது (Blood Transfution) அதில் ஹெபடைடிஸ் B கிருமிகளுக்கான screening செய்யப்பட்டுள்ளதா என்று பார்க்கவும்.

எப்பொழுதும் Disposible syringes -களை பயன்படுத்துதல் வேண்டும்.

பிரசவம், அறுவை சிகிச்சை, கருக்கலைப்பு போன்ற நேரங்களில் மருத்துவ உபகரணங்களை முறைப்படி தொற்று நீக்கம் செய்ய வேண்டியது அவசியம்.

இந்நோய் உள்ளவர்களுடன் உடலுறவு கொள்வதை தவிர்த்தல் வேண்டும்.

இந்த நோயாளிகளை பராமரிப்பவர்களும் சிகிச்சை அளிப்பவர்களும், செவிலியர்கள் மற்றும் உதவியாளர் களும் தடுப்பூசி போட்டு கொள்ள வேண்டும்.

## சிகிச்சை முறை

Daclatasvir / Sofosbuvir

Ledipasvir / Sofosbuvir போன்ற மருந்துகள் மூன்று மாதங்களுக்கு கொடுக்க வேண்டும்.

## உணவு முறை

1.இட்லி, இடியாப்பம், சாதம், இளநீர், மோர் மற்றும் பழச்சாறு அருந்துதல் நல்லது.

2.கொழுப்பு மற்றும் எண்ணெய் அதிகமாக உள்ள உணவுப் பொருள்கள் (இறைச்சி, முட்டை, வெண்ணெய், நெய், தயிர்) தவிர்த்தல் நல்லது.

3.மதுப்பழக்கம் மற்றும் புகைப்பிடித்தலை தவிர்க்க வேண்டும்.


Prime Indian Hospitals
Changing Lives...
1051, Poonamallee High Road,
Arumbakkam, Chennai-600 106
Ph : 91-44-2363 9999, 91 98844 93140
Email: *chairman@primeindianhospitals.com*
*primeindianhospitals@gmail.com*

Life Care
DKJ Hospital
CARE... with love
177/3, M.T.H. Road, Villivakkam, Chennai - 49.
Ph : 044-26180099, 044-43577755,
8754590905
email: *chennaigastro@gmail.com*
Web: www.chennaigastro.com
www.chennaigastroenterlogist.com